வினா எண் 420— திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

420 திருத்தணி வட்ட மருத்துவ மனையில் விபத்துப்பிரிவு.

* 3796— திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருத்தணி வட்ட மருத்துவமனையிலுள்ள விபத்து பிரிவு இயங்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக இயங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருத்தணி அரசு மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு 17-5-83ல் ஏற்படுத்தப்பட்டு தொடர்ந்து இயங்கி வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி வட்ட மருத்துவ மனையில் உள்ள அவசர விபத்துப் பிரிவு முன்னாள் மாண்புமிகு முதலமைச்சர் மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் அவர்களால் துவக்கப்பட்டு சிறப்பான கட்டிடங்கள் கொடுக்கப்பட்டு இருந்தன. ஆனால் தற்போது அந்த விபத்துப் பிரிவு செயல் படாது அந்த விபத்துப் பிரிவிற்கான கட்டிடத்தை வேறு பணிக்கு ஈடுபடுத்தி வருகிறார்கள். குறிப்பாக அந்த விபத்துப் பிரிவுக்குக் கொடுக்கப்பட்ட மொபைல் எக்ஸ்ரே பிரிவும், மொபைல் கருவியும் இன்றைய தினம் அந்த வட்ட மருத்துவ மனையில் சரியான முறையில் பயன்படுத்தப்படுவது இல்லை என்ற ஒரு குறை இருந்து கொண்டிருக்கிறது. எனவே, தமிழகத்தினுடைய நம்பிக்கை நட்சத்திரமும், தமிழக மக்களுடைய காவல் தெய்வமுமாக இருந்து கொண்டிருக்கிற எங்கள் இதய தெய்வம், தமிழக நிரந்தர முதல்வர் புனிதத்தாய் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் இந்தக் குறையைக் களைவதற்கு முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுமே நேரில் அந்த மருத்துவமனையைச் சென்று பார்த்தோம்.

1992 ஏப்ரல் 7]

அந்த மருத்துவமனையில் அந்த சிகிச்சைப் பிரிவு இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது. அதில் பத்து படுக்கைகள் இருக் கின்றன. அந்த பத்து படுக்கைகளும் இயங்கிக்கொண்டுதான் இருக்கின்றன. கட்டிடத்தில் சில குறைபாடுகளோ அல்லது வேறு இடத்திற்கு அல்லது வேறு பணிக்கு மாற்றப்பட்டு இருக்கிறதா என்பதைப் பற்றி நான் கேட்டு அதற்கான நட வடிக்கை எடுக்கிறேன். அதற்காக ஒதுக்கப்பட்ட கருவிகள் முறையாக பயன்படுத்தப்படுகிறதா இல்லையா என்பதைப் பற்றியும் கேட்டு நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் அந்தப் பிரிவு இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 481, திரு. தேனி பன்னீர் செல்வம் இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) திரு. கே. தவசி. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

வனத்துறைக்குச் சொந்தமான காடுகளில் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்கல்.

481—

*4024—திரு. தேனி. பன்னீர்செல்வம்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

கம்பம், கூடலூர், லோயர்கேம்ப் மலை அடிவாரம், கடமலைக்குண்டு மற்றும் மயிலாடும்பாறை ஒன்றிய மலைப் பகுதிகளிலுள்ள அரசு காடுகளிலும் வனத்துறைக்குச் சொந்த மான காடுகளிலும் பல ஆண்டுகாலமாக குடியிருந்தும், விவசாயம் செய்தும் வருவோர்க்கு அந்தந்த நிலங்களை பட்டா செய்து தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

1980-ம் ஆண்டு வனப்பாதுகாப்பு சட்டப்படி, மைய அரசின் இசைவின்றி வனநிலங்களை வனமற்ற உபயோகத்திற்கு வழங்க இயலாது. மற்றும் இந்த வனப்பகுதி பெரியார் வைகை நீர்ப் பிடிப்பு பகுதியில் உள்ளதால் பட்டா வழங்க இயலாது.

(முற்பகல் 10-00)

திரு. கே. தவசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடமலைக்குண்டு, மயிலாடும்பாறை ஒன்றியத்தைச் சேர்ந்த பகுதிகளில் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பாக குடியேறிய வர்கள் இன்னும் பட்டா வாங்காத நிலையிலே இருக்கிறார்கள். அதேபோல, கல்லுப்பட்டியிலிருந்து முத்தாலம்பாறை வரை மாண்புமிகு பேரவைத் தலைவருடைய ஊருக்கும் எங்களுக்கும் உள்ள தொடர்புள்ள ரோட்டை கடந்த 1980-ஆம் ஆண்டு